# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் (வழக்கு நடவடிக்கைகளை விசாரித்தலும் தீர்மானித்தலும்) (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2003, மாச்சு மாதம் 21 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 10.75 தபாற் செலவு : ரூபா 4.50

# 2003 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் (வழக்கு நடவடிக்கைகளை விசாரித்தலும் தீர்மானித்தலும்) (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 53/2002

**கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்கீழும் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின்கீழும் செய்யப்பட்ட விண்ணப்பங்களினதும் ஆற்றுப்படுத்துகைகளினதும் துரிதமான விசாரணைக்கும் தீர்மானத்திற்கும் ஏற்பாடுசெய்வதற்கும் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தையும் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தையும் திருத்துவதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

முன்னுரை.

கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்கீழும் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின்கீழும் செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் ஆற்றுப்படுத்துகைகளையும், அத்தகைய விண்ணப்பங்களுக்கும் ஆற்றுப்படுத்துகைகளுக்குமான திறத்தவர்கள், அவை தொடர்பில் குறுகிய காலப் பகுதியொன்றிற்குள் முடிவுகளைப் பெறக்கூடியதாக அவை துரிதமாக முடிவுசெய்யப்படுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகியுள்ளது ஆதலாலும் :

அவ்விதம் துரிதமாக முடிவுசெய்யப்படுவதற்கு வசதியளிப்பதற்காகத் தொழில் நியாய சபைகளுக்கும் ஆணையாளருக்கும் செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகைகளையும் தீர்மானிப்பதிலும், அத்தகைய விண்ணப்பங்கள்மீது ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கெதிராக கோப்பிலிடப்பட்ட மேன்முறையீடுகளை விசாரித்தல், மற்றும் தீர்மானித்தல் தொடர்பிலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பில் கால வரையறையை நிர்ணயித்தல் விரும்பத்தக்கதெனக் கருதப்படுகின்றது ஆதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் இத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் (வழக்கு நடவடிக்கைகளை விசாரித்தலும் தீர்மானித்தலும்) (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்

2 -H 16855 -700 (2002/10)

துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## தொழில் நியாயசபைகளின் முன்னிலையிலுள்ள வழக்கு நடவடிக்கைகளைத் தீர்மானித்தல்

உதவிச் செயலாளர் விண்ணப்பத்தின் பிரதியை தொழில்தருநர் முதலாளருக்கு அனுப்புதல்.

2. (1) விண்ணப்பமொன்று, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் பிரிவு 31ஆ என்பதன்கீழ் தொழில் நியாய சபையொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்டதன்மீது, அத்தகைய விண்ணப்பம் முறையான படிவத்திலிருப்பின் உடனடியாகவும் எந்த விடயத்திலும் அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் அதன் பிரதியொன்றை, அத்தகைய விண்ணப்பம் எந்தத் தொழில்தருநர் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்தத் தொழில்தருநருக்கு அனுப்பிவைத்தல் அத்தகைய தொழில் நியாயசபையின் உதவிச் செயலாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பம் தொடர்புறுத்தும் விடயத்திற்கு அவரது மறு மொழியை எடுத்துக்காட்டும் இணைப்பிரதியிலான கூற்றொன்றை அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற இருபத்தொரு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் அனுப்பிவைக்குமாறு எழுத்திலான அறிவித்தல்மூலம் அவரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும். தேவைப்படுத்தப்பட்ட கூற்றை இணைப் பிரதியில் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனுப்பி வைத்தல் தொழில்தருநரின் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூற்று கிடைக்கப்பெற்ற மூன்று வேலை நாட்களுக்குள், கூற்றின் பிரதியொன்றை விண்ணப்பகாரருக்கு அனுப்பிவைப்பது உதவிச் செயலாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அதற்கான விண்ணப்பகாரரின் மறுமொழியை எடுத்துக்காட்டும் இணைப்பிரதியிலான கூற்றொன்றை அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதிலிருந்து இருபத்தியொரு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் தமக்கு அனுப்பிவைக்குமாறு எழுத்திலான அறிவித்தல்மூலம் அவரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும். தேவைப்படுத்தப்பட்ட கூற்றை இணைப்பிரதியில் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் உதவிச் செயலாளருக்கு அனுப்பிவைத்தல் விண்ணப்பகாரரின் கடமையாதல் வேண்டும்.

(3) நியாயசபையால் பதிவுசெய்யப்படவுள்ள விதிவிலக்கிற்குரிய காரணங்களுக்காகத் தவிர்த்து (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதிகளின் நீடிப்பு எதனையும்

அனுமதிக்காதிருப்பது தொழில் நியாயசபையின் கடமையாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பக்காரரால் அனுப்பப்பட்ட கூற்று கிடைக்கப்பெற்றதன்மீது உடனடியாகவும் எந்த விடயத்திலும் கிடைக்கப்பெற்ற அத்தகைய தேதியின் பின்னரான மூன்று வேலைநாட்களுக்குப் பிந்தாமலும் விண்ணப்பத்தை விசாரணைக்கு நிர்ணயித்தலும் ; அத்துடன் அத்தகைய தேதிபற்றி விண்ணப்பத்திற்கான எல்லா திறத்தவர்களுக்கும் அறிவித்தல்மூலம் தெரிவிப்பது தொழில் நியாயசபையின் கடமையாதல் வேண்டும்.

(5) விடயத்திற்கேற்ப தொழில்தருநர் அல்லது விண்ணப்பகாரர் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட கூற்றை அனுப்பத் தவறுமிடத்து, உடனடியாகவும் எந்த விடயத்திலும் அத்தகைய தவணை தவறுகையின் தேதியின் பின்னரான மூன்று வேலைநாட்களுக்குப் பிந்தாமலும் விண்ணபத்தை விசாரணைக்கு நிர்ணயித்தலும் அத்துடன் அத்தகைய தேதிபற்றி விண்ணப்பத்திற்கான எல்லாத் திறத்தவர்களுக்கும் அறிவித்தல்மூலம் தெரிவிப்பதும் தொழில் நியாயசபையின் கடமையாதல் வேண்டும்.

3. தொழில் நியாயசபையின் முன்னிலையிலுள்ள விண்ணப்பமொன்றிற்கான திறத்தவர் ஒருவர், போதிய காரணம் காட்டாமல் அத்தகைய நியாயசபையின் முன்னிலையிலுள்ள விசாரணைக்குச் சமுகமளிக்கத் தவறுவாராயின் அல்லது அத்தகைய நியாயசபையின் ஏதேனும் விசாரணையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாவிடில், அத்தகைய திறத்தவரின் அல்லது அத்தகைய திறத்தவரின் அல்லது அத்தகைய திறத்தவரின் பிரதிநிதியின் சமுகமளிக்காமை எது எவ்வாறிருப்பினும் வழக்கு விசாரணையையும் தீர்மானத்தையும் தொடர்ந்து மேற்கொள்ளலாம். *எவரேனும் திறத்தவர் சமுகமளியாத விடத்து தொழில் நியாயசபை தொடர்ந்து விசாரணையை மேற்கொள்ளல்.*

4. எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும் தொழில் நியாயசபையொன்றுக்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்டு அதனைப் பற்றிய அறிவித்தல் அத்தகைய விண்ணப்பத்திற்கான திறத்தவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளவிடத்து, தொழில் நியாயசபையானது அத்தகைய விண்ணப்பத்தை நாளுக்குநாள் அது முடிவுறும்வரை தொடர்ந்து விசாரணை செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நியாயசபையால் பதிவுசெய்யப்படவேண்டிய விதிவிலக்கான காரணங்களுக்காகத் தவிர அத்தகைய விசாரணையின் ஒத்திவைப்பு எதனையும் அனுமதித்தலாகாது. *விசாரணையின் ஒத்திவைப்பு அனுமதிப்படுதல்.*

விண்ணப்பங்கள் தொடர்பில் தொழில் நியாயசபைகளின் தத்துவங்களும் கடமைகளும்.

**5.** (1) அவசியமானதென நியாயசபை கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா விசாரணைகளையும் செய்வதும், அத்தகைய எல்லாச் சாட்சியங்களையும் கேட்பதும், அதன் பின்னர் தொழில் நியாயசபைக்கு நீதியானதும் ஒப்புரவானதுமாகத் தோன்றக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குவதும் எந்தத் தொழில் நியாயசபைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்தத் தொழில் நியாயசபையின் கடமையாதல் வேண்டும் அத்தகைய கட்டளை அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குப் பிந்தாமல் செய்யப்படு தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளையானது நியாயசபையில் வெளிப்படையாக வழங்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ்க் கட்டளையொன்று ஆக்கப்பட வுள்ள தேதி பற்றிய அறிவித்தல் நியாயசபையின் உதவிச் செயலாளரால் விண்ணப்பத்திற்கான எல்லா திறத்தவர்களுக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31ஈ என்னும் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, தொழில் நியாயசபையொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31ஈ என்னும் பிரிவின் கீழ் செய்யப்பட்ட மீளாய்விலுள்ள மேன்முறையீடுகளை அல்லது விண்ணப்பங்களை கோப்பிடலும் விசாரணை செய்தலும் தீர்மானித்தலும்.

**6.** (1) தொழில் நியாயசபையொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கெதிராக கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31ஈ என்னும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடு பற்றிய மனு ஒன்று எந்தத் கட்டளையிலிருந்து மேன்முறையீடு முன்வைக்கப்படுகின்றதோ அந்தக் கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் (எந்தக் கட்டளையிலிருந்து மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்தக் கட்டளை ஆக்கப்பட்ட நாள் உட்பட ஆனால் ஞாயிறு மற்றும் பொது விடுமுறைத் தினங்கள் புறநீங்கலாக) கோப்பிடப்படுதல் வேண்டும்.

(2) தொழில் நியாயசபையொன்றின் ஏதேனும் கட்டளைக்கெதி ராகக் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31ஈ என்னும் பிரிவின்கீழ் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடொன்று அல்லது மீளாய்வுக்கான விண்ணப்பமொன்று, அத்தகைய மேன்முறை யீடு அல்லது விண்ணப்பம் கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் விசாரணை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

**பிரிவு 31ஈ என்பதன்கீழ் செய்யப்பட்ட எழுத்தாணைக்கான விண்ணப்பங்களும் அத்தகைய விண்ணப்பத்தின்மீது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையிலிருந்து உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடும் நான்கு மாதங்களுக்குள் விசாரிக்கப்படுதலும் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.**

7. (1) நியாயசபையால் நடத்தப்படும் ஏதேனும் வழக்கு நடவடிக்கை அல்லது தொழில் நியாயசபையொன்றின் தலைவரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை தொடர்பில் உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, மேற்செல் என்னும் எழுத்தாணை அல்லது ஆணையீட்டெழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளையொன்றை வழங்குவதற்கு கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31ஈ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து அத்தகைய மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் அத்தகைய விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானித்தலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கெதிராக உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் மேன்முறையீடொன்று, அக்கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், உயர் நீதிமன்றம் அத்தகைய மேன்முறையீடு உயர்நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் அத்தகைய மேன்முறையீட்டை விசாரணை செய்து தீர்மானித்தலும் வேண்டும்.

**உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடுகள் மீதான தீர்மானம்.**

8. அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றிலிருந்து கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் பிரிவு 31ஈஈ என்பதன்கீழ் உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்று அத்தகைய மேன்முறையீடு உயர்நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

**சான்றுக் கட்டளைச் சட்டம் ஏற்புடைத்தாதலாகாது.**

9. இச்சட்டத்தின்கீழான தொழில் நியாயசபையொன்றின் முன்னிலையில் வழக்கு நடவடிக்கைகளின் நடாத்துகைக்குச் சான்றுக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

**இச்சட்டத்தின்கீழ் அறிவித்தல், விண்ணப்பம் முதலியவற்றைச் சேர்ப்பித்தல்.**

10. இச்சட்டத்தின் கீழ் ஆளெவருக்கும் வழங்கப்படும் ஓர் அறிவித்தலை, விண்ணப்பத்தை அல்லது வேறு ஆவணத்தைச் சேர்ப்பித்தலானது, நேரில் அல்லது பதிவுத் தபால்மூலம் அல்லது அத்தகைய அறிவித்தலை, விண்ணப்பத்தை அல்லது வேறு ஆவணத்தை அத்தகைய ஆளின் கடைசியாக அறியப்பட்ட வதிவிடத்தின் வாயிலில் ஒட்டிவிடுவதன்மூலம் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

## வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தீர்மானித்தல்

வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை விண்ணப்பம் செய்யப்பட்ட இரண்டு மாதத்திற்குள் ஆக்கப்படுதல் வேண்டும்.

**11.** வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில், எவரேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட தொழிலை முடிவுறுத்துவதற்கு தொழில்தருநர் ஒருவருக்கு அங்கீகாரம் அளிப்பதற்கு அல்லது மறுப்பதற்கு கட்டளையை ஆக்கும்போது தொழில்தருநரிடமிருந்து விண்ணப்பம் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அவரது கட்டளையை ஆக்குவது ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழான கட்டளை விண்ணப்பம் செய்யப்பட்ட இரண்டு மாதத்திற்குள் ஆக்கப்படுதல் வேண்டும்.

**12.** வேலையாள் ஒருவரால் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கு விண்ணப்பமொன்று ஆணையாளருக்குச் செய்யப்படுமிடத்து வேலையாளிடமிருந்து விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அத்தகைய கட்டளையை ஆக்குவது ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 6அ என்னும் பிரிவின் கீழான கட்டளை விண்ணப்பம் செய்யப்பட்ட இரண்டு மாதத்திற்குள் செய்யப்படுதல் வேண்டும்.

**13.** வேலையாள் ஒருவரின் நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பில் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 6அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது கட்டளையை, வேலையாளிடமிருந்து அவருக்கு விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் ஆக்குவது ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

## நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகைகளைத் தீர்மானித்தல்

கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழான ஆற்றுப்படுத்துகையொன்று தொடர்பில் நடுத்தீர்ப்பாளர்களின்

**14.** கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 4ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கைத்தொழில் பிணக்கொன்று தீர்வொன்றுக்காக நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தப் பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்ட

தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழான தமது அளிப்பை வழங்குவது அத்தகைய நடுத்தீர்ப்பாளரின் கடமையாதல் வேண்டும் :

அளிப்பு ஆற்றுப் படுத்துகை செய்யப்பட்ட மூன்று மாதங்களுள் அளிப்பொன்றைச் செய்தல்.

ஆயின், எவ்வாறாயினும், நடுத்தீர்ப்பாளர் பிணக்கிற்கு வினைப்பயனுள்ள இணக்கமொன்றின் அக்கறைகளுக்காக மேலும் காலஅவகாசம் தேவைப்படுகின்றதெனக் கருதும் பட்சத்தில், நடுத்தீர்ப்பாளர் தனது அளிப்பை மேலும் இரண்டு மாதங்கள் கொண்ட காலப்பகுதியொன்றுக்குள் எந்நேரத்திலும் வழங்குவது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும், அத்தகைய நிகழ்வில் அவர் அதற்கான காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

## கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின்கீழ் அளிப்புகளின் அல்லது கட்டளைகளின் பொருள்கோடலுக்காக செய்யப்படும் விண்ணப்பங்கள்

15. விடயத்திற்கேற்ப நடுத்தீர்ப்பாளர் ஒருவரால், தொழில் நியாயசபையினால் அல்லது கைத்தொழில் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட ஏதேனும் அளிப்பு அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை பற்றிய பொருள்கோடல் தொடர்பிலான கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 34 ஆம் பிரிவின்கீழான ஆற்றுப்படுத்து கையொன்று, அத்தகைய அளிப்பு வழங்கப்பட்ட அல்லது கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆற்றுப்படுத்துகை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அத்தகைய ஆற்றுப்படுத்துகையை விசாரித்துத் தீர்மானித்தலும் விடயத்திற்கேற்ப நடுத்தீர்ப்பாளரின், தொழில் நியாயசபையின் அல்லது கைத்தொழில் நீதிமன்றத்தின் கடமையாதலும் வேண்டும்.

கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழான ஆற்றுப்படுத்துகை கட்டளை அல்லது அளிப்பு ஆக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் செய்யப்படுதல் வேண்டும்.

## முடிவுறாதிருக்கும் வழக்கைத் தீர்மானித்தல்

16. (1) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31ஆ என்னும் பிரிவின்கீழ் தொழில் நியாயசபையொன்றுக்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் அத்தகைய நியாயசபையின் முன்னிலையில் முடிவுறாதிருக்குமிடத்து, அத்தகைய விண்ணப்பத்தையிட்டு அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய

முடிவுறாதிருக்கும் வழக்கு நடவடிக்கைகள்.

எல்லா விசாரணைகளையும் செய்தலும் அத்தகைய எல்லா சாட்சியங்களையும் கேட்டலும்; அத்துடன் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குப் பிந்தாமல், நீதியானதும் ஒப்புரவானதும் என நியாயசபைக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குவதும் நியாயசபையின் கடமையாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2, 6 அல்லது 6அ என்பதன்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் ஆணையாளரின் முன்னிலையில் முடிவுறா திருக்குமிடத்து, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிந்தாமல் அத்தகைய வழக்கு நடவடிக்கை களுக்கு இயைபான பிரிவுகளின்கீழ் தமது கட்டளையை ஆக்குவது ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆன ஆற்றுப்படுத்துகை ஒன்றின்மீதான விசாரணை எதுவும் நடுத்தீர்ப்பாளரொருவரின் முன் முடிவுறாதிருக்குமிடத்து, அத்தகைய நடுத்தீர்ப்பாளர் அத்தகைய ஆற்றுப்படுத்துகைமீதான அவரது நடுத்தீர்ப்பை இச்சட்ட மானது நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குப் பிந்தாமல் ஆக்குதல் வேண்டும்.

பொருள்கோடல்.

17. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலன்றி —

"ஆணையாளர்" என்பது கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டி ருத்தல் வேண்டும்;

"கைத்தொழிற் பிணக்குகள் சட்டம்" என்பது திருத்தப்பட்ட வாறான (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டம் என்று பொருள்படும்;

"கைத்தொழிற் பிணக்கு" என்பது கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"தொழில் நியாயசபை" என்பது கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31அ என்னும் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஒரு தொழில் நியாயசபை என்று பொருள்படும் ;

"அட்டவணைப்படுத்தப்பட்ட தொழில்" அத்துடன் "வேலையாள்" என்பன வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

"வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என்பது திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்துதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என்று பொருள்படும்.

**18.** இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.